**இலங்கை பயோடெக்னோலொஜி நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பயோடெக்னோலொஜி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 14 மாதங்களுக்கான வரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 14 மாதங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களினூடாக 2021 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 14 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாவதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவன நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவன வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

பொதுவாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளது. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவன செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவன ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதாக,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதாக,

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 50,222,771 ஆன நட்டமொன்று ஆனதுடன் அதனை கணக்கிடும் போது பின்வருவனவை கவனத்திற்கு எடுக்கப்பட்டிருந்தன.

| | |
|---|---:|
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 240,000 |
| சம்பளம் மற்றும் படிகள் | (17,624,586) |
| சேமலாப நிதியத்தின் பங்களிப்பு | (2,098,348) |
| நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு | (524,587) |
| கட்டிட வாடகை | (23,676,200) |
| தேய்மானம் | (313,825) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | (6,219,753) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1/2021 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களிற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த செயற்பாட்டு கைநூலில் 3 ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 (ii) பந்தி பிரகாரம் மனித வள முகாமைத்துவம் தெதாடர்பாக முழு அதிகாரம் பணிப்பாளர் பேரவைக்கு ஒப்படைத்திருந்தது. 2022 மே 31 கணக்காய்வு திகதி வரையும் கம்பணியின் ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | 2022 ஏப்ரல் 08 ஆம் திகதியளவில் ஆட்சேர்ப்பு கொள்கை வரைபை தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இறுதி அறிக்கை அங்கீகரிக்கும் செயற்பாட்டில் உள்ளது. | ஆட்சேர்ப்பு திட்டத்தை சரியாக தயாரித்து முறையாக அங்கீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு உள்ளக நீர்குழாய் புதைப்பதற்காக 2021 திசெம்பர் 20 ஆம் திகதி ரூபா 12,600,000 திறைசேரி நிதியத்தினூடாக தேசிய நீர் வழங்கல் சபைக்கு செலுத்தியிருந்த போதும் குறித்த சேவைகளை வழங்குவதை பூர்த்தி செய்திருக்கவில்லை. | இந்த சேவை வழங்குனர்கள் வேலைகளை ஆரம்பிக்க செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் கோரியிருந்ததால், ஒகுக்கிய பாதீட்டினுள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டது. நீர் வழங்களை நிறுவனத்தின் உட்பிரவேசத்திற்கு அருகில் கொண்டுவர தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. SLIBTEC பூங்காவை திட்டமிடும் கிரயம் நிறுவன பாதீட்டின் கீழ் செய்ய முடியாத கவனிக்கத்தக்க தொகையொன்றாகையால், USAID ஊடாக உதவியை பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. உதவியூடாக திட்டத்தை பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதால் உள்ளக நீர் வழங்கல் தொகுதியை பூர்த்தி செய்ய முடியாது. | செலவுகளை மேற்கொள்ளும் போது உச்ச வினைத்திறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனி இரசாயன கூடத்தை பேனிச் செல்வதற்காக இலங்கை நனோ தொழிழ்நுட்ப நிறுவனத்திடம் கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்று 2021 செப்தம்பர் முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்கு ரூபா 37,171,800 ஆன தொகையொன்றை சேலுத்திருந்தது. கட்டிடத்திற்காக வாடகை செலுத்தியிருந்த போதும் இரசாயன கூடத்தை இஸ்தாபிக்ககும் நடவடிக்கை கணக்காய்வு திகதிவரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சின் சுகாதார தொகுதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் செயற்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியமொன்றூடாக அனைத்து இரசாயனகூட திட்டமிடல் நடவடிக்கைகளை முடிவுருத்தியுள்ளதுடன் இரசாயனகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. நாட்டில் நிலவும் நிலைமையினுள் USD கட்டணம் அதிகரித்மை காரணமாக தாமதம் ஏற்படுகின்றது. | இரசாயனகூட இஸ்தாபித்தலை துரிதமாக்க வேண்டும் |

## 3.3 மனித வள முகாமைத்ததுவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி இதுவரை ஆராய்ச்சி செயற்பாடுகளை ஆரம்பித்திருக்காத போதும், ஆராய்ச்சி திட்டத்தை தயாரிக்கும் செயற்பாட்டிற்கு உதவி செய்வதற்காக ஒருவருக்கு ரூபா 200,000 ஆன மாதாந்த சம்பளம் மற்றும் படிகளின் கீழ் 5 விஞ்ஞானிகள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். அவ்வாறே நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பர்டுகள் குறைவாக இடம்பெரும் சந்தர்ப்பங்களில் மாதத்திற்கு ரூபா 280,000 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவின் கீழ் நிதி முகாமையாளர் ஒருவரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | நிறுவனத்தின் ஆரம்ப நிலை நடவடிக்கை, முக்கியமான அபிவிருத்தி திட்டங்கள், பரிசோதனை அறிக்கை தயாரிப்பதற்கு மற்றும் மூல உபாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக போதிய அறிவுடன்கூடிய தொழிற்துறையினரை ஆட்சேர்க்க வேண்டும். இந்த ஆட்சேர்ப்பு 1/2021 பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்கி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சம்பளம் தீர்மானித்தல் நிலவும் தொழில்சார் கேல்வி, வியாபார புதிய போக்கின் அடிப்படையில் நிறுவனத்தின் எதிர்பாப்பை சிறந்தமுறையில் மேற்கொள்ள முடியுமான வகையில் அனைத்து அங்கீகாரங்களிற்கு கீழ் மெற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலவு மேற்கொள்ளும் போது உச்ச செயலாற்றலை பெற்றுக்கொள்ள முடியுமான விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 பெப்ரவரி முதல் மாதாந்தம் ரூபா 350,000 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தி 2021 ஆகஸ்ட் மாதம் இறுதியளவில் பயோடெக்நோலொஜி பூங்காவை உருவாக்க மற்றும் | பொருட்களின் பற்றாக்குறை, தொற்று நிலைமை, பயணக் கட்டுப்பாடு, காரணங்களால் அனைத்து செயற்பாடுகளும் தாமதமானது. நகர | மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளும் சிக்கனமாக வேணடியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | அராய்ச்சிற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் செயற்பாட்டிற்கு கருத்திட்ட முகாமையாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொண்டுள்ள போதும் 2022 மே கணக்காய்வு திகதி வரையும் அச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு இயலாதிருந்தது. | அபிவிருத்தி அதிகார சபையினால் இதுவரை உறுதியை பெற்றுத்தறாததுடன், இதன் காரணத்தால், உள்ளக நீர்த் தொகுதி மற்றும் மின்கம்பிகளுடன் காணியை அளவிடுவதற்கு திட்டமிடல் மற்றும் உள்ளக பாதை தொகுதிகளை திட்டமிடலை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்ல முடியாதுள்ளது. பாதையை விரிவாக்கல் மற்றும் மின்கம்பிளை நிர்மாணித்தலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. USAID அரச பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளாததால் அவ் வேலைகளில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. அவ்வாறே கட்டிட உரிமையாளரிடம் திட்டம் இல்லாதன் காரணமாக மற்றும் அவர்களுக்கு செலுத்தவுள்ள பணத்தை அரசினால் செலுத்தாததால் எமக்கு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையொன்று காணப்படுகிறது. | உச்ச செயலாற்றல் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பூரணமாக திறைசேரி நிதியத்தை பயன்படுத்தி கம்பனியை நடாத்திச் சென்ற போதும் ஊழியர்களை ஆட்சேர்பது மற்றும் சம்பளம் தீர்மானித்தல் திறைசேரியின் கட்டுப்பாடுயின்றி மேற்பார்வை சபையின் தீர்மானத்தின் மீது மேற்கொள்ள 1/2021 பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வித செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாத இக் கம்பனியின் ஊழியர்களிற்காக சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவிற்காக 2020 ஒக்தோபர் முதல் 2021 திசெம்பர் வரை ரூபா 20,247,521 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டி இருந்ததுடன் அது நிறுவனத்தின் மொத்த கிரயத்தின் 40 சதவீதமாக இருந்தது. | கம்பனி அமைச்சரவை பத்திர இலக்கம் 20/1085/204/107 கீழ் பொது வியாபார எண்ணக்கருவின் கீழ் இஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாவதுடன் 2020.12.11 ஆம் திகதி வர்த்தமானி மூலம் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இஸ்தாபிக்கப்பட்டது. இங்கு குறித்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக போட்டிச் சந்தையினுள் நிலவும் நோக்கம் மற்றும் புதிய போக்கு பற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டியதாகவும் அதற்காக பொருத்தமானவாறு நிறுவன கட்டமைப்பை தயாரித்துக் கொள்ள வேண்டியதாகவும் தெளிவாக | செயற்பாட்டு நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடடப்படுகிறது. அதன் பிரகாரம் அவ்வாறான நிறுவன நடவடிக்கைகள் செய்ய வேண்டிய முறை பற்றி 1/2021 பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் நாம் செயற்பட்டுள்ளோம். | |
| (ஈ) | 2021 பெப்ரவரி 24 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் பிரதான நிறைவேற்று அலுவலர்களின் ஆரம்ப சம்பளம் விஷேட கருத்திட்ட படி, போக்குவரத்து படி மற்றும் தொலை தொடர் படி போன்றவை உள்ளடங்களாக ரூபா 250,000 ஆக தீர்மானித்து அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த அந்த படிகளின் பெறுமதிகளை வேறாக காட்டியிருக்கவில்லை. 2015 மே 25 ஆம் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 3.3 பந்தி பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான அலுவலர் ஒருவருக்கு அவ் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்த அல்லது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பதிலாக மாதாந்த பிரயணப்படி ஒன்றை செலுத்துதல் ஆகிய மாற்றுவழி இரண்டின் ஒன்றை தெறிவு செய்ய வேண்டியிருந்த போதும், 2021 பெப்ரவரி 24 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் பிரதான செயற்பாட்டு அலுவலரிற்கு கடமை பணிகளுக்காக கடமைக்கு செல்ல மற்றும் வறுவதற்கு கம்பனியிற்கு சொந்தமான வாகனத்தை பயன்படுத்தவும் அதற்கு தேவையான எரிபொருள் செலவினத்தை கம்பனியால் மிள் நிரப்பவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அலுவலரின் சம்பளத்தை தீர்மானிக்கும் போதும், போக்குவரத்து படியை உள்ளடக்கி சம்பளத்தை தீர்மானிதிருந்த காரணத்தால் மேல் 1/2015 சுற்றிக்கையிற்கு முரணாக வாகனத்தை மற்றும் பயணப்ப படி ஆகிய இரண்டையும் வழங்குவதாக அவதானிக்கப்பட்டன. | 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தரிற்காக ஆரம்ப சம்பளம் ரூபா 250,000 இற்குக் கீழாக விஷேட கருத்திட்ட படி, பயணப் படி மற்றும் தொலை தொடர் படி பெற்று கொடுக்க கலந்துரையாடிய போதும் அதற்கு பின்னர் இடம் பெற்ற பணிப்பளர் சபை கூட்டத்தில் மாதாந்த ஆரம்ப சம்பளம் ரூபா 250,000 மாத்திரம் வழங்க தீர்மானிக்கப்பட்டது. அங்கு மேலும் நிறுவனத்திற்கு சொந்தமான ஒரே மோடர் வண்டியை பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தரின் கீழ் பேணிச்செல்லவும் அதற்காக செலவிடப்படும் எரிபொருள் செலவை நிறுவனத்தால் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இப்போது நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ளது ஒரு மோடார் வண்டியானதுடன் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளும் பொது தேவையான கடமை பயணங்களுக்காவும் பெரும்பாலும் பயன்படுத்தப்படும். அதனால் இந்த மோடர் வண்டி நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அலுவலரின் கடமைக்காக மாத்திரம்மல்லாது பொதுவாக பயன்படுத்துவதாகவும், | இங்கு குறிப்பிடப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தை பல தடவைகள் கோரிய போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. செலவுகளை மேற்கொள்ளும் போது சட்டம் விதி பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எவ்வித பயனப்படிகள் அல்லது எரிபொருள் செலவினம் மீள்நிரப்பல் செய்யப்பட்டவில்லை. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தை 09 பிரதான செயற்பாடுகளின் கீழ் காட்டியிருந்ததுடன் அவற்றின் 02 செயற்பாடுகளிற்காக 2021 ஆண்டில் இலக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 07 செயற்பாடுகளிற்காக செயலாற்றல் சுட்டி (KPI) அல்லது இலக்ககள் காட்டியிருக்கவில்லை. | 06 நோக்கெல்லைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது அபிவிருத்தி செய்யவுள்ள முதல் 02 துறைகளுமாவது மனிதவளத் தொகுதியும் மனிதவள கொள்கைகள் அபிவிருத்தி மற்றும் SLIBTEC புத்தாக்க பூங்காவை திட்டமிடலாகும். | நடைமுறை சாத்திய திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திட்டமிட்ட செயல்களை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கை திட்ட செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட வருடாந்த கிரயத்தை காட்டியிருக்கவில்லை. | கிரயம் தொடர்பான தகவல்கள் 2021 அண்டில் பாதீட்டினுள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டு கிரயத்தை காட்ட வேண்டும். |
| (இ) | செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான பரிசோதனையின் போது 2021 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் பூர்த்தி செய்யப்படாத செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன. | தேவையான மேலதிக ஏற்பாடுகள் இன்னும் கடைக்காமை, பூங்கா திட்டமிடளிற்கான பொருட்கள் பற்றாக்குறை, கொவிட் தொற்று நிலைமை , நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பூங்காவிற்கான உறுதியை பெற்றுக்கொடுக்காமை, இரசாயன கூடங்களிற்கு உபகரணங்கள் பெற்றுக்கொள்வது தாமதித்தமை, நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினை போன்ற விடயங்கள் காரணமாக செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு தாமதானது. | நடைமுறை சாத்திய திட்டமிடல் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திட்டமிட்ட செயல்களை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டும். |